අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/12/07/18

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025.09.07.

**சுற்றுநிருப இலக்கம் : 27/2025**

அனைத்து மாகாணப் பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பாடசாலை அதிபர்கள்,

**பாடசாலைகளின் தரம் 2 முதல் தரம் 11 வரை மாணவர்களை அனுமதித்தல் (தரம் 5 மற்றும் 6 தவிர்த்து)**

இலக்கம் அப/25/1463/806/089 மற்றும் 2025.09.04ம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் அமைச்சரவையின் பரிந்துரைக்கமைய, பாடசாலைகளின் தரம் 2 முதல் தரம் 11 தரம் வரை மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2023.04.25ம் திகதியுடைய 17/2023 இலக்க சுற்றுநிருபம், 2018.02.16 ம் திகதியுடைய 03/2018 இலக்க சுற்றுநிருபம் மற்றும் 2019.06.26ம் திகதியுடைய 33/2019 இலக்க சுற்றுநிருபத்தின் திருத்தம் மற்றும் 2008.09.19ம் திகதியுடைய 2008/37 இலக்க சுற்றுநிருபம் உட்பட அவ் விடயம் தொடர்பில் இதற்கு முன்னராக வெளியிடப்பட்டுள்ள அனைத்து சுற்றுநிருபங்களும் இரத்துச் செய்யப்படுவதுடன், இதனைத் தொடர்ந்து தரம் 5 மற்றும் தரம் 6 தவிர்த்து, தரம் 2 முதல் தரம் 11 வரை மாணவர்களை அனுமதிக்கும் போது இச் சுற்றுநிருபத்தின் ஆலோசனைகள் வலுவில் இருக்கும்.

**2.0 ஒரு வகுப்பில் மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு தரத்தில் சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை**

2.1 பாடசாலைகளில் தரம் 2 முதல் தரம் 11 வரையான தரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

(அ) தரம் 2 முதல் தரம் 5 வரையான தரங்களில் ஒரு வகுப்பில் இருக்க வேண்டிய அனுமதிக்கப்பட்ட ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கை 40 ஆகும்.

(ஆ) தரம் 6 முதல் தரம் 11 வரையான தரங்களில் ஒரு வகுப்பில் இருக்க வேண்டிய அனுமதிக்கப்பட்ட ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கை 45 ஆகும்.

மேலே 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையினை ஒரு தரத்தில் இருக்கும் சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கையால் பெருக்கும் போது ஒரு தரத்தில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை கணிப்பிடப்படும். வெற்றிடங்களாக கருதப்படுவது, வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கோரப்படும் திகதிக்கு உரிய தரத்தில் இருக்கும் மாணவர் எண்ணிக்கையானது இந்த

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

Scanned with CamScanner

அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையைத் தாண்டாதிருக்கும் பட்சத்தில் மாத்திரமே ஆகும்.

ஒரு வகுப்பில் இருக்க வேண்டிய ஆகக்கூடிய மாணவர் எண்ணிக்கையானது, புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்கமைய எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கமைய திருத்தம் செய்யப்படலாம்.

2.2 ஒரு தரத்தில் இருக்க வேண்டிய சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

(அ) தரம் 1 முதல் தரம் 5 வரையில் அனைத்து தரங்களுக்கும் சம எண்ணிக்கையிலான வகுப்புக்களை பேண வேண்டும் என்பதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள (ஆ) சந்தர்ப்பங்கள் தவிர்த்து, ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தரம் 6 முதல் தரம் 11 வரையான அனைத்து தரங்களுக்கும் சம எண்ணிக்கையிலான வகுப்புக்களைப் பேண வேண்டும்.

(ஆ) i. விளையாட்டுப் பாடசாலையாக பெயரிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மாத்திரம் விளையாட்டுச் செயற்பாடுகளுக்குத் தகுதி பெறும் மாணவர்களுக்கான வகுப்பொன்றை தரம் 8 இல் ஆரம்பிக்க முடியும். இவ்வாறாக ஒரு வகுப்பு ஆரம்பிக்கும் பட்சத்தில் அவ் வகுப்புடன் உருவாகும் சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கையினை தரம் 11 வரை பேண வேண்டும்.

ii. விளையாட்டுப் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது கல்வி அமைச்சினால் "விளையாட்டுப் பாடசாலைகளுக்கு விளையாட்டுப் புலமைப் பரிசில்தாரர்களை அனுமதித்தல், நிர்வாகம் மற்றும் நிதிசார் செயற்பாடுகள்" தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 24/2020 சுற்றுநிருபத்திற்கமைய நேர்முகப் பரீட்சை நடாத்தி உரிய தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

iii. விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில் அனுமதிப்பதற்காக தரம் 8 இல் ஆரம்பிக்கப்படும் சமாந்தர வகுப்புக்களில் வெற்றிடங்களை விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படும் மாணவர்களுக்காக மாத்திரம் ஒதுக்க வேண்டும் என்பதுடன், மீதி வெற்றிடங்களை தரம் 11 வரையில் அவ்வாறே வைத்திருக்க வேண்டும்.

iv. விசேட விளையாட்டுத் திறமைகளுடன் கூடிய மாணவர்கள் தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் ஒன்றில் குறித்த பாடசாலைக்கு விளையாட்டுத் திறமையின் கீழ் விண்ணப்பித்திருப்பின் குறித்த மாணவர்களையும் மேற்படி விளையாட்டு வெற்றிடங்களின் அடிப்படையில் மாத்திரம் இவ் வகுப்பில் அனுமதிக்க முடியும்.

(இ) தேசிய பாடசாலை எனின், கல்வி அமைச்சின் கட்டமைப்புக் குழுவினதும், மாகாணப் பாடசாலை எனின், மாகாண கட்டமைப்புக் குழுவினதும் தீர்மானமின்றி வகுப்பு/ சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்தலாகாது.



Scanned with CamScanner

(ஈ) ஏதேனும் ஒரு தரத்தில் சமாந்தர வகுப்புக்களை நடாத்திச் செல்லும் போது ஒரு வகுப்பில் இருக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை பூரணப்படுத்தப்படும் வகையில் ஆகக் குறைந்த சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கையினை பேண வேண்டும்.

(உ) ஒரு பாடசாலையில் ஏதேனுமொரு பௌதீக காரணி ஒன்றின் அடிப்படையில் ஒரு வகுப்பில் மாணவர் எண்ணிக்கையினை அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விடவும் குறைவான எண்ணிக்கையில் பேண வேண்டும் எனின் (உ+ம்: வகுப்பறையின் அளவு உரிய அளவில் இல்லாமை) அதற்கான தகவல்களை உறுதிப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளருடாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

## 3.0 தரம் 5 மற்றும் 6 தவிர்த்து, தரம் 2 முதல் தரம் 11 வரையான தரங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்.

பாடசாலை ஒன்றின் தரமொன்றில் நிலவும் வெற்றிடங்களுக்கு கீழ்வரும் வகுதிகளுக்குரித்தான மாணவர்களை நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் ஒழுங்கு வரிசைப்படி தெரிவு செய்ய வேண்டும்.

❖ இதன் போது பாடசாலைக்குரித்தான ஊட்டல் பிரதேசம் எனப்படுவது பாடசாலை அமைந்துள்ள நிர்வாக மாவட்டமாகும். ஏதேனும் ஒரு நிர்வாக மாவட்டத்தின் எல்லையில் ஏதேனும் ஒரு பாடசாலை அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் எல்லையில் உள்ள அடுத்த மாவட்டத்தின் அண்மித்த பிரதேச செயலகப் பிரிவையும் கருத்தில் கொள்ள முடியும்.

3.1 மாணவர்களை அனுமதிக்கும் போது கருத்தில் கொள்ளப்படும் வகுதிகள்

**(அ) கடமைத் தேவைகளின் பேரில் முந்தைய சேவை நிலையத்திலிருந்து 50 கி.மீ இற்கும் அதிகமான தூரத்தில் அமைந்துள்ள சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றத அரச நிறுவனம்/ கூட்டுத்தாபனம்/ அரச வங்கி உத்தியோகத்தர்களது பிள்ளைகள்**

இதன் போது புதிய சேவை நிலையம் அல்லது பாடசாலைக்கு அனுமதிப்பதற்கு எதிர்பார்க்கும் பிள்ளை உட்பட குடும்ப உறுப்பினர்களது தற்போதைய/ புதிய வதிவிடமானது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்திருத்தல் வேண்டும்/

புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற தினம் முதல் 03 வருட காலப் பகுதிக்குள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர் இடமாற்றம் பெறும் சந்தர்ப்பத்தில் பிள்ளை விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு உரித்தான கல்வி வலயத்தினுள் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதாயின் இதற்காக விண்ணப்பிக்க முடியாது.



Scanned with CamScanner

**(ஆ) பிள்ளையுடன் வெளிநாட்டில் இருந்து விண்ணப்ப இறுதித் திகதிக்கு அண்மித்த 03 வருடங்களுக்குள் நாட்டிற்கு வந்து பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தினுள் வதியும் பெற்றோரின் பிள்ளைகள்.**

- **வெளிநாட்டு விடுமுறைக்கு அனுமதி பெற்று வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு இவ் வகுதியின் கீழ் விண்ணப்பிக்க முடியாது என்பதுடன், குறித்த மாணவர்களுக்கு இலக்கம் ඵවආර්ඩී/ඊකිවඩී/2002/26 உடைய வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான விடுமுறை தொடர்பான சுற்றுநிருபத்திற்கமைய செயற்பட வேண்டும்.**

I. இலங்கை அரசின் தேவைகளுக்காக, இலங்கை தூதுக்குழுக் கடமைகளுக்காக, புலமைப் பரிசில் அல்லது கல்விச் செயற்பாடுகள் அல்லது தொழிலுக்காக ஒரு வருடத்திற்கு குறையாத காலப் பகுதிக்கு பெற்றோர்/ தாய்/ சட்டபூர்வமான பாதுகாவலருடன் வெளிநாடு சென்று வசித்து, அவர்களுடன் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வந்துள்ள பிள்ளைகள்.

II. தனிப்பட்ட தேவைகளுக்காக ஒரு வருடத்திற்கு குறையாத காலப் பகுதிக்கு பெற்றோர்/ தாய்/ தந்தை/ சட்டபூர்வமான பாதுகாவலருடன் வெளிநாட்டில் வசித்து அவர்களுடன் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வந்துள்ள பிள்ளைகள்.

**(இ) 50 கி.மீ இற்கு அதிகமான தூரத்தில் வதிந்திருந்து, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்திற்கு குடும்ப உறுப்பினர்களுடன் (பிள்ளையும் உட்பட) வதிவிடத்தை மாற்றி வருகை தந்திருக்கும் பெற்றோரின் பிள்ளைகள்**

இதன் போது வதிவிடத்தை மாற்றியமைக்கான காரணங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் மூலமாக நிரூபிக்க வேண்டும்.

இதற்கு விண்ணப்பிக்க முடிவது, வதிவிடத்தை மாற்றம் செய்து வந்த தினம் முதல் 3 வருட காலப் பகுதிக்குள் மாத்திரமே ஆகும்.

விண்ணப்பதாரர் வதிவிடத்தை மற்றும் சந்தர்ப்பத்தில் பிள்ளை விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான கல்வி வலயத்தினுள் அமைந்திருக்கும் பாடசாலை ஒன்றில் கற்பதாயின் இதன் கீழ் விண்ணப்பிக்க முடியாது.

**(ஈ) கடமைத் தேவையின் அடிப்படையில் சேவை நிலையத்திலிருந்து 50 கி.மீ ஐ விட அதிக தூரத்தில் அமைந்துள்ள சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள தனியார் துறையில் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்**

இதன் போது புதிய சேவை நிலையம் அல்லது பாடசாலைக்கு அனுமதிக்க எதிர்பார்க்கும் பிள்ளை உட்பட குடும்ப உறுப்பினர்களது தற்போதைய/ புதிய வதிவிடம் விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்திருத்தல் வேண்டும்.



Scanned with CamScanner

இதற்காக விண்ணப்பிக்க முடிவது, புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற தினம் முதல் 03 வருட காலப் பகுதிக்குள் மாத்திரமே ஆகும்.

விண்ணப்பதாரர் இடமாற்றம் பெறும் சந்தர்ப்பத்தில் பிள்ளை, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தாகும் கல்வி வலயத்தினுள் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதாயின், இதன் கீழ் விண்ணப்பிக்க முடியாது.

**(உ) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டத்தின் உரிய வருடத்திற்கான வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ள, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் வதியும் தரம் 7 முதல் தரம் 11 வரையான மாணவர்கள்**

**(ஊ) பணிக்குழுவினர் வகுதி**

**i. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலையொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்**

**ii. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலைக் கல்வியில் நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய அரசாங்க நிறுவனமொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்.**

**iii. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கல்வித் துறைக்குரிய வேறு அரசாங்க அல்லது சட்டபூர்வமான நிறுவனம் ஒன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**iv. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அரச பல்கலைக்கழகமொன்றில் நிரந்தரமாக/ தகுதிகாண் சேவையாற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களது பிள்ளைகள்**

**v. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான**



Scanned with CamScanner

ஊட்டல் பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி வகுதிகளுக்குரித்தாகாத வேறு அரசாங்க நிறுவனமொன்றின் பிள்ளைகள்

3.2 ஒரு தரத்தில் நிலவும் வெற்றிடங்களை பிரசித்தப்படுத்துதல்

(அ) பாடசாலை அதிபர்கள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 31 ம் திகதி மற்றும் ஜூன் 30 ம் திகதிக்கு ஒவ்வொரு தரங்களிலும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கணிப்பிட்டு, தேசிய பாடசாலை எனின், தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளருக்கும், மாகாணப் பாடசாலை எனின், மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், அவ் அவ் தரங்களில் உள்ள சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை, மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை வழங்க வேண்டும்.

(ஆ) தேசிய பாடசாலைகளின் வெற்றிடங்கள் தொடர்பில் விபரங்கள் இவ் அமைச்சின் இணையத் தளத்திலும், மாகாணப் பாடசாலைகளின் விபரங்கள் அவ் அம் மாகாணக் கல்வித் திணைக்களங்களின் இணையத் தளங்களிலும் பிரசுரிக்கப்படும்.

(இ) இவ்வாறாக வெற்றிடங்களை பிரசுரித்த பின்னர் ஒவ்வொரு பாடசாலை மூலமும் தமது பாடசாலையின் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலையின் இணையத் தளத்திலும் விண்ணப்பப் படிவங்களை கோரமுன்னர் பிரசுரிக்க வேண்டும்.

3.3 விண்ணப்பிப்பதற்கான நடைமுறை

(அ) மேலே 3.1 இன் கீழ் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் இச் சுற்றுநிருபத்தின் உப ஆவண இலக்கம் 01 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவங்களுடன் பிள்ளையை அனுமதிப்பதற்கு அவசியமான தகைமைகள் தொடர்பில் தம்மால் உறுதிப்படுத்தப்பட்ட, விண்ணப்பிக்கும் வகுதிக்குரிய அனைத்து ஆவணங்களின் பிரதிகளையும், அவற்றை உறுதிப்படுத்துவதற்காக சத்தியப் பிரமானப் பிரகடனமொன்றையும் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் முன்வைக்கும் ஆவணங்கள் தவிர்த்து வேறு எந்தவொரு ஆவணமும் பின்னராக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) பாடசாலைக்கு விண்ணப்பிக்கும் போது ஆகக் குறைந்தது வெற்றிடங்கள் நிலவும் *05* பாடசாலைகளுக்கேனும் விண்ணப்பிப்பது கட்டாயமாகும். பாடசாலைகளின் பெயர் குறிப்பிடும் போது அனைத்து விண்ணப்பப் படிவங்களிலும் பாடசாலைகளின் விருப்பு வரிசைக்கமைய பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) ஏதேனும் ஒரு பாடசாலைக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வகுதிகளின் கீழ் விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு வகுதிகளின் கீழும் தனித் தனியான விண்ணப்பப் படிவங்களை உரிய பாடசாலைகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.



Scanned with CamScanner

3.4 **தெரிவு செய்தல் மற்றும் புள்ளி வழங்கும் நடைமுறை**

3.4.1. பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்களுக்கமைய தகுதி பெறும் மாணவர்களைத் தெரிவு செய்யும் பணியினை நேர்முகப் பரீட்சை சபையினர் மேற்கொள்ள வேண்டும்.

3.4.2. பாடசாலை ஒன்றின் ஏதேனும் ஒரு தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றிருப்பின், குறித்த தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கான விண்ணப்பதாரர்களை அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டும். இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கல் செயன்முறைக்கமைய பாடசாலையினால் தற்காலிகமாக வழங்கப்படும் புள்ளிகளுக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய எண்ணிக்கையை தெரிவு செய்ய வேண்டும்.

3.4.3 பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை பாடசாலையின் தரங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் அனைத்து விண்ணப்பதாரர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல் வேண்டும்.

**மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான நேர்முகப் பரீட்சை சபையினரை கீழ்வருமாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.**

3.4.4 தரம் 2 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை சபையின் கட்டமைப்பு:

- i. *பாடசாலையின் அதிபர் - (தலைவர்)*
- ii. *பாடசாலையின் சிரேஷ்ட பிரதி/ உதவி அதிபர் – செயலாளர்)*
- iii. *பாடசாலையின் பிரிவுத் தலைவர்/ சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் – (உறுப்பினர்)*

இதன் போது தரம் 2 முதல் 4 வரையான நேர்முகப் பரீட்சையினை நடாத்தும் போது மேலே இலக்கம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் ஆரம்ப பிரிவின் தலைவராக இருத்தல் வேண்டும். அதிபரால் பிரேரிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபைக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையின் பெயர் பட்டியலின் பிரதியொன்றை, தேசிய பாடசாலையெனின் தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளருக்கும், மாகாணப் பாடசாலை எனின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3.4.5 பாடசாலையில் நிலவும் வெற்றிடங்களுக்கமைய தெரிவு செய்வதற்கு தகுதி பெறும் மாணவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தற்போது கல்வி கற்கும் பாடசாலை, தரம், விண்ணப்பிக்கும் வகுதி மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் ஒன்றைத் தயாரித்து நேர்முகப் பரீட்சை சபையின் அனைத்து உறுப்பினர்களும் அதில் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். இதன் போது சம புள்ளிகளைப் பெற்றுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட மாணவர்கள் இருப்பின் பாடசாலைக்கு உள்ள அண்மைத் தன்மையின் அடிப்படையில் அம் மாணவர்களை வரிசைப்படுத்தி ஆவணம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.



Scanned with CamScanner

3.4.6 குறித்த ஆவணங்களை, அனைத்து தேசிய பாடசாலைகளும் இவ் அமைச்சின் செயலாளருக்கும், மாகாணப் பாடசாலை எனின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அனுமதிக்காக சமர்ப்பிக்கும் போது இச் சுற்றுநிருபத்தின் உப ஆவண இலக்கம் 02 இற்கமைய உரிய ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.4.7 பாடசாலைகளுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்குரிய நடைமுறைகளுடன் தொடர்பான கால வரையறைகள் கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

| | முதல் சந்தர்ப்பம் | இரண்டாவது சந்தர்ப்பம் |
|---|---|---|
| வெற்றிடங்களைக் கணிப்பிட வேண்டிய திகதி | ஜனவரி 31 | ஜூன் 30 |
| வெற்றிடங்களைப் பிரசுரிக்க வேண்டிய திகதி | பெப்ரவரி 15 | ஜூலை 15 |
| நேர்முகப் பரீட்சை சபைக்கு அனுமதி பெற்றுக் கொள்ளல் | பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் | ஜூலை 15ம் திகதிக்கு முன்னர் |
| விண்ணப்பப் படிவங்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய காலப் பகுதி | பெப்ரவரி 16 முதல் பெப்ரவரி 28 ம் திகதி வரை | ஜூலை 16 முதல் ஜூலை 31 வரை |
| நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் | மார்ச் 01 முதல் மார்ச் 15 வரை | ஆகஸ்ட் 01 முதல் ஆகஸ்ட் 15 வரை |
| இறுதிப் பட்டியலை அனுமதிக்காக அனுப்புதல் | மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் | ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன்னர் |

3.4.8. நேர்முகப் பரீட்சை மூலம் தரம் 2 முதல் தரம் 4 வரையான தரங்களுக்கு மாணவ மாணவியரைத் தெரிவு செய்யும் போது இச் சுற்றுநிருபத்தின் கீழ்வரும் 3.4.8.1 மற்றும் 3.4.8.2 இல் தரப்பட்டுள்ள விடயங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

அதற்கமைய மேற்படி வகுதியின் கீழ் விண்ணப்பிக்கும் தரம் 2 முதல் தரம் 4 வரையான மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடிய மொத்தப் புள்ளிகள் 50 ஆகும.

3.4.8.1 வதிவிடத்திலிருந்து அல்லது சேவை நிலையத்திலிருந்து பாடசாலைக்கு உள்ள அண்மைத் தன்மை

இதன் போது வதிவிடத்திலிருந்து அல்லது சேவை நிலையத்திலிருந்து பாடசாலை வரையான மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்தும் பாதை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், இதற்காக Google வரைபடம் (Google Map) மூலம் காட்டப்படும் மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதையை ஏற்புடையதாக கருத வேண்டும்.

இதன் போது வதிவிடம் அல்லது சேவை நிலையம் ஆகிய இரண்டில் விண்ணப்பதாரருக்கு மிகவும் அனுகூலமான சந்தர்ப்பத்தின் கீழ் புள்ளி வழங்கப்பட வேண்டும்.

10 கி.மீ இற்குள் - 25 புள்ளிகள்



Scanned with CamScanner

| | |
|---|---|
| 10 கி.மீ ஐ விட அதிகம் 15 கி.மீ வரை | - 20 புள்ளிகள் |
| 15 கி.மீ ஐ விட அதிகம் 20 கி.மீ வரை | - 15 புள்ளிகள் |
| 20 கி.மீ ஐ விட அதிகம் | - 05 புள்ளிகள் |

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**

**3.4.8.2 மேலே 3.4.8.1 இற்குரிய புள்ளிகள் இச் சுற்றுநிருபத்தின் அனைத்து வகுதிகளுக்கும் பொதுவானது என்பதுடன், குறித்த புள்ளிகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் வகுதிக்குரியதான பகுதிகளுக்கு மாத்திரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளி வழங்கப்படல் வேண்டும்.**

(அ) கடமைத் தேவைகளுக்காக இடமாற்றம் பெற்ற அரச நிறுவனங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ அரச வங்கி உத்தியோகத்தர்களது இடமாற்றத்தின் தன்மை

| | |
|---|---|
| சேவையின் தேவையின் அடிப்படையில் | - 25 புள்ளிகள் |
| வருடாந்த இடமாற்றம் | - 15 புள்ளிகள் |
| வேறு | - 10 புள்ளிகள் |

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**

(ஆ) வெளிநாடுகளில் வதிந்திருந்து, மீண்டும் வந்து பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தில் வசிக்கும் பெற்றோர்/ தாய்/ தந்தை/ சட்டபூர்வமான பாதுகாவலர்களது வெளிநாடு சென்றமைக்குரிய தன்மை

| | |
|---|---|
| இலங்கையின் தூதுக்குழு/ இலங்கை அரசின் தேவைகளின் பேரில் | - 25 புள்ளிகள் |
| தொழிலுக்காக | - 20 புள்ளிகள் |
| புலமைப் பரிசிலுக்காக | - 15 புள்ளிகள் |

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**

(இ) நிரந்தர வதிவிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களது புதிய வதிவிடத்திலிருந்து முந்தைய வதிவிடத்திற்குள்ள தூரம்

இதன் போது இரண்டு வதிவிடங்களுக்குமிடையேயான தூரத்தைக் கணிப்பிடுவதற்காக Google வரைபடத்தைப் (Google Map) பயன்படுத்த வேண்டும்.

| | |
|---|---|
| 150 கி.மீ அல்லது அதற்கு மேல் எனின் | - 25 புள்ளிகள் |
| 150 கி.மி இற்கு குறைவு, 100 கி.மீ வரை | - 20 புள்ளிகள் |
| 100 கி.மி இற்கு குறைவு, 50 கி.மீ வரை | - 15 புள்ளிகள் |

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**

(ஈ) கடமைத் தேவைகளுக்காக இடமாற்றம் பெற்ற தனியார் துறை உத்தியோகத்தர்களது இடமாற்றத்தின் தன்மை

| | |
|---|---|
| சேவையின் தேவையின் அடிப்படையில் | - 25 புள்ளிகள் |
| வருடாந்த இடமாற்றம் | - 15 புள்ளிகள் |
| வேறு | - 10 புள்ளிகள் |

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**



Scanned with CamScanner

(உ) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள், புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திற்குரியதாக

விண்ணப்பிக்கும் பாடசாலையின் வெட்டுப் புள்ளி அல்லது அதற்கு மேல் எனின் - 25 புள்ளிகள்

பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டத்தின் வெட்டுப் புள்ளி அல்லது தற்கு மேல் எனின் - 20 புள்ளிகள்

(ஆகக் கூடிய புள்ளிகள் 25)

(ஊ) i. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்

a) விண்ணப்பிக்கும் பாடசாலையிலேயே சேவையாற்றுவதாயின்

கல்விசார் பணிக்குழுவினர் - 20 புள்ளிகள்
கல்விசாரா பணிக்குழுவினர் - 17 புள்ளிகள்

வேறு பாடசாலையொன்றில் சேவையாற்றுவாராயின்

கல்விசார் பணிக்குழுவினர் - 18 புள்ளிகள்
கல்விசாரா பணிக்குழுவினர் - 15 புள்ளிகள்

b) அரச சேவையில் நிரந்தர சேவைக் காலம்

05 வருடங்கள் அல்லது அதற்கு மேல் - 05 புள்ளிகள்
05 வருடங்களுக்கு குறைவு, 04 வருடங்கள் வரை - 04 புள்ளிகள்
04 வருடங்களுக்கு குறைவு 03 வருடங்கள் வரை - 03 புள்ளிகள்
03 வருடங்களுக்கு குறைவு 02 வருடங்கள் வரை - 02 புள்ளிகள்
02 வருடங்களுக்கு குறைவு 01 வருடம் வரை - 01 புள்ளிகள்

ii. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட, அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலைக் கல்வியின் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்தும் அரச நிறுவனமொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்

iii. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருக்கும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள, கல்வித் துறைக்குரிய வேறு அரச மற்றும் சட்டபூர்வமான நிறுவனமொன்றில் நிரந்தரமாக சேவையாறும் உத்தியோகத்தர்கள்



Scanned with CamScanner

iv. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச பல்கலைக்கழகங்களில் நிரந்தரமாக/ தகுதிகாண் அடிப்படையில் சேவையாற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகள்

மற்றும்

v. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருக்கும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள, மேற்படி வகுதிகளுக்கு உரித்தாகாது வேறு அரச நிறுவனமொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்

மேலே ii, iii, iv மற்றும் v ஆகியவற்றிற்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

a) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் பொதுக் கல்விப் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பாடசாலை உரித்தாகும் மாகாணக் கல்வி அமைச்சு/ மாகாணக் கல்வித் திணைக்களம், பாடசாலை உரித்தாகும் வலயக் கல்வி அலுவலகம், மற்றும் அக் கல்வி வலயத்தின் கீழுள்ள கோட்டக் கல்வி அலுவலகமொன்றிற்குரிய பணிக்குழுவில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்
- 20 புள்ளிகள்

மேற்படி நிறுவனங்களுக்கு உரித்தாகாத மாகாணக் கல்வி அமைச்சு ஒன்றில், மாகாணக் கல்வித் திணைக்களமொன்றில், வலயக் கல்வி அலுவலகமொன்றில், மற்றும் கோட்டக் கல்வி அலுவலகமொன்றின் பணிக் குழுவில் நிரந்தர சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் - 17 புள்ளிகள்

கல்வித் துறையின் வேறு அரச மற்றும் சட்டபூர்வமான நிறுவனமொன்றில் நிரந்தர சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மற்றும் அரச பல்கலைக்கழகங்களில் நிரந்தர/ தகுதிகாண் அடிப்படையில் சேவையில் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் - 14 புள்ளிகள்

மேற்படி வகுதிகளுக்குரித்தாகாத வேறு அரச நிறுவனமொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்

- 11 புள்ளிகள்

b) அரச சேவையில் நிரந்தர சேவைக் காலம்

05 வருடங்கள் அல்லது அதற்கு மேல் - 05 புள்ளிகள்
05 வருடங்களுக்கு குறைவு, 04 வருடங்கள் வரை - 04 புள்ளிகள்
04 வருடங்களுக்கு குறைவு 03 வருடங்கள் வரை - 03 புள்ளிகள்



Scanned with CamScanner

03 வருடங்களுக்கு குறைவு 02 வருடங்கள் வரை - 02 புள்ளிகள்
02 வருடங்களுக்கு குறைவு 01 வருடங்கள் வரை - 01 புள்ளிகள்

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**

3.4.9 நேர்முகப் பரீட்சை மூலம் தரம் 7 முதல் தரம் 11 வரை மாணவ மாணவியரை அனுமதிக்கும் போது அனுமதிக்கும் போது, மேலே, 3.4.8.1 மற்றும் 3.4.8.2 இல் உள்ள விடயங்களுக்கு மேலதிகமாக கீழே (அ) முதல் (ஈ) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாக கொள்ள வேண்டும்.

அதற்கமைய மேற்படி வகுதிகளின் கீழ் விண்ணப்பிக்கும் தரம் 7 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடிய மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

(அ) மாணவன்/ மாணவியின் தற்போதைய கல்வி முன்னேற்றம்:

இறுதித் தவணைப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் சராசரி 70% அல்லது அதற்கு மேல் எனின் -15 புள்ளிகள்
இறுதித் தவணைப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் சராசரி 50% -70 % இற்கிடையே -12 புள்ளிகள்
இறுதித் தவணைப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் சராசரி 40% -50 % இற்கிடையே - 08 புள்ளிகள்
இறுதித் தவணைப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் சராசரி 40% இற்கு குறைவு - 04 புள்ளிகள்

**(ஆகக் கூடிய புள்ளிகள் 15)**

(ஆ) அண்மித்த 05 வருடங்களுக்குள் விளையாட்டு/ புத்தாக்கம்/ அழகியல்/ இணைப் பாடவிதானம்/ வெளிப் பாடவிதான செயற்பாடுகள்:

**அண்மித்த 05 வருடங்களுக்குள் ஆகக் கூடியது 05 வெற்றிகள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படும்.**

சர்வதேச வெற்றிகள்/ பங்குபற்றுகை - 25 புள்ளிகள்
சர்வதேச மட்டத்தில் ஒரு வெற்றிக்கு 05 புள்ளிகள் வீதம்/ சர்வதேச மட்டப் போட்டிகளில் பங்குபற்றியமைக்கு 4.5 புள்ளிகள் வீதம்

அகில இலங்கை/ தேசிய மட்ட வெற்றிகள் - 20 புள்ளிகள்
அகில இலங்கை/ தேசிய மட்டத்தில் ஒரு வெற்றிக்கு முதலாம் நிலைக்கு 04 புள்ளிகள் வீதம்/ இரண்டாம் நிலைக்கு 03 புள்ளிகள் வீதம்/ மூன்றாம் நிலைக்கு 2.5 புள்ளிகள் வீதம்

மாகாண மட்ட வெற்றிகளுக்கு - 15 புள்ளிகள்
மாகாண மட்டத்தில் ஒரு வெற்றிக்கு முதலாம் நிலைக்கு 03 புள்ளிகள் வீதம்/ இரண்டாம் நிலைக்கு 2.5 புள்ளிகள் வீதம்/ மூன்றாம் நிலைக்கு 01 புள்ளி வீதம்



Scanned with CamScanner

வலய மட்ட வெற்றிகளுக்கு - 10 புள்ளிகள்

வலய மட்டத்தில் ஒரு வெற்றிக்கு முதலாம் நிலைக்கு 02 புள்ளிகள் வீதம்/ இரண்டாம் நிலைக்கு 1.5 புள்ளி வீதம்/ மூன்றாம் நிலைக்கு 01 புள்ளி வீதம் வீதம்

கோட்ட மட்ட வெற்றிகளுக்கு - 7.5 புள்ளிகள்

கோட்ட மட்டத்தில் ஒரு வெற்றிக்கு முதலாம் நிலைக்கு 1.5 புள்ளி வீதம்/ இரண்டாம் நிலைக்கு 01 புள்ளி வீதம்/ மூன்றாம் நிலைக்கு 0.5 புள்ளி வீதம்

பாடசாலை மட்ட வெற்றிகளுக்கு - 05 புள்ளிகள்

பாடசாலை மட்டத்தில் ஒரு வெற்றிக்கு முதலாம் நிலைக்கு 01 புள்ளி வீதம்/ இரண்டாம் நிலைக்கு 0.5 புள்ளி வீதம்/ இரண்டாம் நிலைக்கு 0.25 புள்ளி வீதம்

**(ஆகக் கூடிய புள்ளிகள் 25)**

* இதற்காக புள்ளி வழங்கும் போது ஒரு போட்டிக்கு வழங்கப்பட வேண்டிய புள்ளி வழங்கப்பட வேண்டியது ஆகக் கூடிய மட்டத்திற்கு மாத்திரமே ஆகும்.

**மேற்படி போட்டிகள் தனியார் நிறுவனம் அல்லது அமைப்பு ஒன்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டியாக இருப்பின், அது இவ் அமைச்சு அல்லது மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

(இ) தலைமைத்துவத் திறன்கள்

மாணவத் தலைவர்/ விளையாட்டுத் தலைவர் - 06 புள்ளிகள்

பாடசாலையின் பல்வேறு கழகங்கள்/ சங்கங்களின் பிரதான பதவியொன்றை வகித்திருத்தல் - 04 புள்ளிகள்

**(ஆகக் கூடிய புள்ளிகள் 10)**

வெளிநாட்டிலிருந்து வந்த வகுதியின் கீழ் மேலே 3.4.9 இன் கீழ் புள்ளி வழங்கும் போது பொருத்தமான வகையில் கருதி நேர்முகப் பரீட்சை சபையினால் புள்ளிகள் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3.5 தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விசேட விடயங்கள்

(அ) பாடசாலைகளில் உரிய தரங்களுக்குரிய (இரு மொழி வகுப்புக்கள் உட்படலாக) சமாந்தர வகுப்புக்கள் அனைத்திலும் இருக்க வேண்டிய மொத்த மாணவர் எண்ணிக்கையைத் தாண்டாத வகையில் தெரிவு செய்தல் வேண்டும். இரு மொழி வகுப்புக்களுக்காக தனியாக வெற்றிடங்கள் கணிப்பிடப்படலாகாது.

(ஆ) பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்த பின்னர் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.



Scanned with CamScanner

(இ) நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கும் அனைத்து தகவல்களையும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், உரிய அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே, எவரேனும் ஒரு விண்ணப்பதாரரால் முன்னிலைப்படுத்தப்படும் தகவல்கள்/ ஆவணங்கள் போலியானவை என்பதாக உறுதிப்படுத்தப்பட்டால், குறித்த விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், உரிய மாணவர் தெரிவு செய்யப்படலாகாது. தெரிவு செய்யப்பட்டிருப்பின் பாடசாலைக்கு அனுமதிக்கப்படலாகாது.

(ஈ) பாடசாலையின் ஒரு தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின், அவ் விண்ணப்பதாரர்களது வதிவிடங்களிலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தன்மைக்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையில் மாணவர்களை தெரிவு செய்ய வேண்டும். (இதன் போது விண்ணப்பதாரர்களது வதிவிடம் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அதனை நிரூபிப்பதற்கு உரித்துறுதிப் பத்திரம், குத்தகை உறுதிப்பத்திரம், வாடகை உடன்படிக்கை, உத்தியோகபூர்வ இல்லம் போன்ற சட்டபூர்வமான ஆவணங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.)

3.6 பாடசாலைகளில் வெற்றிடங்களுக்கமைய தரம் 11 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் பணிகளை பாடசாலையினால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்களது விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க முன்னர் மாத்திரம் மேற்கொள்ள வேண்டும்.

3.7 (அ) **பாடசாலைகளில் ஒவ்வொரு தரங்களிலும் நிலவும் வெற்றிடங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது சுற்றுநிருபத்தில் மேலே 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பப் படிவங்கள் பாடசலைக்கு கிடைக்கப் பெறவில்லை எனின், உரிய வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்புவதற்காக பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஏனைய விண்ணப்பப் படிவங்களையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க முடியும்.**

(ஆ) குறித்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, பாடசாலையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமெனின், இதன் 3.4. இற்கமைய நேர்முகப் பரீட்சை நடாத்தி மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

(இ) மேலே 3.7 (அ) இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு புள்ளி வழங்கும் போது 3.4.8.1 மற்றும் 3.4.9 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உரிய புள்ளிகளை மாத்திரம் வழங்க வேண்டும்.

## 4.0 பொது விடயங்கள்

(அ) இயற்கை அனர்த்தம் அல்லது வேறு அனர்த்த நிலைகள் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைச் சான்றிதழ் போன்றன இல்லாத சந்தர்ப்பங்களில் குறித்த



Scanned with CamScanner

குடும்பம் அனர்த்தத்திற்கு/ இயற்கைப் பேரழிவிற்கு உட்பட்டமை தொடர்பில் கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் அல்லது உரிய முகாமிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களது உறுதிப்படுத்தலைக் கருத்தில் கொண்டு பொருத்தமான வகையில் வெற்றிடங்களுக்கு ஏற்ப உரிய தரத்திற்கு அனுமதித்துக் கொள்ள முடியும். பிறப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க முடியாதவிடத்து, பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்காக சத்தியப் பிரமாணப் பிரகடனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இருப்பினும் பின்னராக பிறப்புச் சான்றிதழ்/ அனுமானிப்பு வயதுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) அரச அனுமதி பெற்ற செயற்றிட்டத்தின் கீழ் தாம் வதியும் வீட்டுடன் கூடிய காணி, காணி சுவீகரிப்பு அல்லது இயற் அனர்த்தம் காரணமாக கல்வி கற்கும் பாடசாலையை மாற்றுவதற்காக விண்ணப்பிக்கும் போது அது தொடர்பில் உரிய ஆவணங்களூடாக உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் தகைமைகளைப் பரிசோதித்து வெற்றிடங்களுக்கமைய அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) முறையாக பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படாத, பாடசாலை செல்ல வேண்டிய வயதில் உள்ள பிள்ளைகள் மற்றும் முறைசாரா கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் எழுத்தறிவு வகுப்புக்களில் கலந்துகொண்டு எழுத்தறிவுத் திறன்களைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகளை அவர்களது வயது மற்றும் தேர்ச்சியின் அடிப்படையில் பொருத்தமான வகுப்புக்களுக்கு அனுமதிக்க முடியும். எழுத்தறிவு வகுப்புக்களுக்கு அல்லது வேறு பாடசாலையொன்றிற்கு சென்றாலும் அதிபர் உட்பட சபையொன்றினூடாக பிள்ளையிடம் உள்ள திறமைகளை பரிசோதித்துப் பார்த்து வெற்றிடங்களுக்கமைய அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தகைய மாணவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் அல்லது சத்தியப்பிரமாணத்தை ஏற்றுக் கொள்ள முடியும். இருப்பினும் அதன் பின்னர் பிறப்புச் சான்றிதழ்/ அனுமானிப்பு வயதுச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஈ) 1960 ம் ஆண்டு இலக்கம் 05 உடைய உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்), இலக்கம் 1961 ம் ஆண்டு இலக்கம் 08 உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (துணை ஏற்பாடுகள்) ஆகிய சட்டங்களுக்கமைய அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்பும் போது கையேற்கும் சந்தர்ப்பத்தில் அப் பாடசாலையில் இருந்த சமயங்கள் சார் மாணவர் சதவீதம் தொடர்பில் கருத்தில் கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு சமயத்தினருக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் குறைவான எண்ணிக்கை இருக்கும் பட்சத்தில், அவ் வெற்றிடங்களை ஏனைய சமயங்களைச் சேர்ந்த மாணவர்களிடையே சம விகித அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு மாணவருக்கும் கல்வியில் சம வாய்ப்புக்களை வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், தாம் கல்வி கற்கும் தரத்திற்கு அமைவாக இதன் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் அல்லது 3.7இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் அரச பாடசாலையொன்றிற்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

குறித்த மாணவர்களது வயது, அடைவு மட்டம் மற்றும் மொழித் திறமை, அரச பாடசாலைகளில் உரிய தரத்தில் கல்வி கற்பதற்கு போதுமானதாக உள்ளதா என்பதைப் பாடசாலை உரித்தாகும் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சை மூலமாக அம் மாணவர்களும் அரச பாடசாலை ஒன்றில் அனுமதி பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(ஊ) இச் சுற்றுநிருபத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மூலமான வசனங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான வசனம் வலுப் பெறும்.

5.0 எவரேனும் ஒரு மாணவர் ஒரு பாடசாலையிலிருந்து விலகி ஒரு வருட காலப் பகுதிக்குள் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களுக்காக மீண்டும் அப் பாடசாலைக்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் (தரம் 5 மற்றும் 6 தவிர்த்து) உரிய தரத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கான வரையறையினுள் வெற்றிடங்கள் நிலவும் பட்சத்தில் முந்தைய அனுமதி இலக்கத்தின் கீழ் மீண்டும் அனுமதிக்க முடியும். அவ்வாறாக மாணவர்களை அனுமதிக்கும் போது தேசிய பாடசாலை எனின், தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளரதும் மாகாணப் பாடசாலை எனின் மாகாணக் கல்விப் பணிப்பாளரதும் அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். எவரேனும் ஒரு மாணவர் பாடசாலையிலிருந்து விலகி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் சென்றிருப்பின், குறித்த மாணவர் அப் பாடசாலையில் அனுமதி பெறுவதற்காக இச் சுற்றுநிருபத்தின் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீண்டும் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

6.0 இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளின் பிரகாரம் மாணவர்களை அனுமதிப்பதற்கான காலப் பகுதி தவிர்த்து வேறு எந்தவொரு சந்தர்ப்பதிலும் கல்வி கற்கும் பாடசாலையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில் அம் மாணவரின் வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது உரிய மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இச் சுற்றுநிருபத்தின் 2.1 இற்கமைய பாடசாலையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் மாகாணப் பாடசாலை ஒன்றை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.0 பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்த பின்னர் அவ் அனைத்து மாணவர்களது பெயர்களையும் மாணவர்களை அனுமதித்தல், வகுப்பேற்றம் மற்றும் பாடசாலையிலிருந்து விலக்குதல் தொடர்பான ஆவணத்தில் (Education C32) குறிப்பிடுதல் வேண்டும். குறித்த ஆவணத்தின் பெயர்களை உள்ளடக்காமல் வேறு எந்தவொரு காரணங்களுக்காகவும் மாணவர்களை பாடசாலைக்கு இணைப்புச் செய்தல் மற்றும் பாடசாலையில் வைத்திருத்தலாகாது என்பதை வலியுறுத்துகின்றேன்.

8.0 நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு அமைவாக பிள்ளைகளை அனுமதிக்குமாறு உத்தரவிடப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் மாணவரின் தொடர் கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இவ் அமைச்சின் செயலாளரைச் சாரும்.



Scanned with CamScanner

9.0 அனைத்து அரச பாடசாலைகளுக்கும் மாணவர்கள அனுமதிக்கும் போது பாடசாலை நிதி முகாமைத்துவம் தொடர்பில் இவ் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பாடசாலை அடிப்படையிலான பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக மாத்திரம் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

10.0 இச் சுற்றுநிருபம் சார்ந்து ஏற்படக்கூடிய எந்தவொரு பிரச்சனை தொடர்பிலும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

நாலக கலுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

பிரதிகள்:-

1. அமைத்து மாகாண ஆளுநர் செயலாளர்கள்
2. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள்
8. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் அனைத்து கிளைகளதும் பிரதானிகள்



Scanned with CamScanner

உப ஆவண இலக்கம் 01

**<u>பாடசாலைகளின் தரம் 2 முதல் தரம் 11 வரை மாணவர்களை அனுமதித்தல் (தரம் 5 மற்றும் 6 தவிர்த்து)</u>**

**<u>மாணவர்களை அனுமதிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்</u>**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு முன்னிலைப்படுத்தப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன், அவ் விடயங்களை நிரூபிப்பதற்கு அவசியமான அனைத்து ஆவணங்களதும் விண்ணப்பதாரர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் இவ் விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பிக்கும் பாடசாலையின் அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**20..... ம் ஆண்டில் ........................................................................ கல்லூரியின்**
**தரம் ................ இற்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவம்**

**விண்ணப்பிக்கும் வகுதி:**

**வெளிநாடு செல்லல்/ இடமாற்றம்/ வதிவிடத்தில் மாற்றம்/ பணிக்குழுவினர் (i, ii, iii, iv, v)/ புலமைப் பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ........................................................................................................................**

**01. மாணவன்/ மாணவியின் விபரம் :-**

1.1 முழுப் பெயர் : ........................................................................................

(குடும்பப் பெயரின் கீழ் கோடிடுக.)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/ தமிழில்) : ..................................................

........................................................................................................................

(இறுதியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதவும். உ+ம்: டப்.ஏ.சீ.டீ விஜேரத்ன)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்): ..................................................

.................

(இறுதியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதவும் (உ+ம் - W.A.C.D. Wijerathna)

1.4 பெண்/ ஆண் பால் நிலை : ........................................................................

1.5 மதம் : ........................................................................................

1.6 கற்கும் மொழி மூலம்:........................................................................

1.7 பிறந்த திகதி : வருடம் ............ மாதம் ............ நாள் ............

1.8 20...... ஜனவரி மாதம் 31ம் திகதிக்கு வயது : வரு........... மாதம் ............ நாட்கள்.........

1.9 தற்போது கல்வி கற்கும் பாடசாலை மற்றும் தரம்: ..................................................



Scanned with CamScanner

**02. விண்ணப்பதாரர் தொடர்பான விபரங்கள்:- (தாய்/ தந்தை/ சட்டபூர்வமான பாதுகாவலர்)**

2.1 முழுப் பெயர் :

.............................................................................................................................................

.............................................................................................................................................

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :

.............................................................................................................................................

.............................................................................................................................................

2.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :.........................................................................

2.4 இலங்கைப் பிரஜையா :............................

2.5 மதம் : .......................................

2.6 நிரந்தர முகவரி

.............................................................................................................................................

.............................................................................................................................................

2.7 தொலைபேசி இலக்கம் : ....................................

2.8 தற்போது வசிக்கும் மாவட்டம் : ........................................

2.9 தற்போதைய வதிவிடம் உரித்தாகும் பிரதேச செயலகப் பிரிவு : ..................................

2.10 தற்போதைய வதிவிடம் உரித்தான கிராம அலுவலர் பிரிவு:: ..........................
இலக்கம் : .......

2.11 தற்போதைய வதிவிட முகவரி:

.............................................................................................................................................

.............................................................................................................................................

2.12 வதிவிடம் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் முந்தைய வதிவிட முகவரி:

.............................................................................................................................................

.............................................................................................................................................

**03. விண்ணப்பிக்கும் ஏனைய பாடசாலைகள் : (விருப்பு ஒழுங்கு வரிசைப்படி)**

| தொடர் இல. | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை (தேசிய/ மாகாணம்) |
|---|---|---|
| **01.** | | |
| **02.** | | |
| **03.** | | |
| **04.** | | |
| **05.** | | |
| **06.** | | |



Scanned with CamScanner

**04. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தாம் விண்ணப்பிக்கும் வகுதிக்குரிய பகுதிகளை மாத்திரம் பூரணப்படுத்தவும்.**

| **விடயம்** | **புள்ளிகள் (அலுவலக உபயோகத்திற் காக)** |
|---|---|
| **4.1 கடமைத் தேவைகளுக்காக முந்தைய சேவை நிலையத்திலிருந்து 50 கி.மீ இற்கும் மேற்பட்ட தூரத்தில் அமைந்துள்ள சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் பெற்று, புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற அரச நிறுவனங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ அரச வங்கி உத்தியோகத்தர்களது பிள்ளைகளின் வகுதி**<br><br>4.1.1 இறுதியாக இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற திகதி: ...............................................<br>4.1.2 இடமாற்றம் பெற்றுள்ள புதிய சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி:<br>.......................................................................................<br>.......................................................................................<br>.......................................................................................<br>4.1.3 இடமாற்றத்திற்கு முந்தைய சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி:<br>.......................................................................................<br>.......................................................................................<br>.......................................................................................<br>4..4. முந்தைய சேவை நிலையத்தில் தொடர்ச்சியான சேவைக் காலம்:<br>...................... முதல் ...................... வரை<br>4.1.5 இடமாற்றம் பெற்றதிலிருந்து விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் திகதிக்கான காலம்:<br>வருடம் ............. மாதம் .......... திகதி ......<br><br>4.1.6 முந்தைய சேவை நிலையத்திலிருந்து புதிய சேவை நிலையத்திற்கான தூரம் ................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.1.7 இடமாற்றம் பெற்று வசிக்கும் வதிவிடத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் ..................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.1.8 இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் ..................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.1.9 இடமாற்றத்திற்கான காரணம் (சேவையின் தேவை/ வருடாந்த இடமாற்றம்/ வேறு என்பதாக குறிப்பிடவும்.)<br><br>.......................................................................................<br>.......................................................................................<br>....................................................................................... | |



Scanned with CamScanner

| | |
|---|---|
| **4.2 வெளிநாடுகளில் வதிந்திருந்து வந்து பாடசாலை உரித்தாகும் ஊட்டல் பிரதேசத்தில் இருக்கும் பெற்றோரின் பிள்ளைகளுக்குரிய வகுதி**<br><br>4.2.1 வெளிநாட்டில் இருந்து மீண்டும் நாட்டிற்கு வந்த திகதி: .......................<br><br>4.2.2 பிள்ளையுடன் தொடர்ச்சியாக வெளிநாட்டில் வசித்த காலம்: ............. ம் திகதி முதல் ...................ம் திகதி வரை<br><br>4.2.3 வெளிநாடு சென்றமைக்கான காரணம்: ..........................................................................<br>..............................................................................................................<br>..............................................................................................................<br><br>4.2.4. வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள தூரம்:.......................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்) | |
| **4.3 50 கி.மீ இற்கு மேற்பட்ட தூரத்தில் வதிந்திருந்து, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்திற்கு தமது குடும்ப உறுப்பினர்கள் சகிதம் (பிள்ளை உட்பட) வதிவிடத்தை மாற்றம் செய்து வந்துள்ள பெற்றோரது பிள்ளைகளுக்கான வகுதி**<br>4.3.1 வதிவிடத்தை மாற்றியமைக்கான காரணம் :...........................................................<br>4.3.2 வதிவிடத்தை மாற்றி புதிய வதிவிடத்திற்கு வந்த திகதி:......................<br>4.3.3 முந்தைய வதிவிட முகவரி: ..........................................................<br>....................................................................................................<br>4.3.4 புதிய வதிவிட முகவரி: .............................................................<br>....................................................................................................<br>4.3.5 புதிய வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள தூரம்:.............................................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.3.6 புதிய வதிவிடத்திலிருந்து முந்தைய வதிவிடத்திற்கான தூரம்:.......................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்) | |



Scanned with CamScanner

| | |
|---|---|
| **4.4 கடமைத் தேவைகளுக்காக முந்தைய சேவை நிலையத்திலிருந்து 50 கி.மீ இற்கு மேற்பட்ட தூரத்தில் அமைந்துள்ள சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் பெற்று, புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள தனியார் துறை நிறுவனமொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகளுக்கான வகுதி**<br><br>4.4.1 இறுதியாக இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற திகதி: ..............................<br>4.4.2 இடமாற்றம் பெற்று வந்த புதிய சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி:<br>..........................................................................................................<br>4.4.3 இடமாற்றத்திற்கு முந்தைய சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி:<br>..................................................................................................<br>4.4.4. முந்தைய சேவை நிலையத்தில் தொடர்ச்சியான சேவைக் காலம்:<br>...................... முதல் ......................வரை<br>4.4.5 இடமாற்றம் பெற்ற தினம் முதல் விண்ணப்பிக்கும் திகதி வரையான காலம்: வரு ............ மாதம் .......... நாள் ......<br>4.4.6 முந்தைய சேவை நிலையத்திலிருந்து புதிய சேவை நிலையத்திற்கான தூரம் ……………………………<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.4.7 இடமாற்றம் பெற்று வசிக்கும் வதிவிடத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் ……………………………<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.4.8 இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் ……………………………<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br><br>4.4.9 இடமாற்றத்திற்கான காரணம் (சேவையின் தேவை/ வருடாந்த இடமாற்றம்/ வேறு என்பதாக குறிப்பிடவும்)<br>.................................................................................................... | |
| **4.5 பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்திலுள் வசிக்கும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் மாவட்ட வெட்டுப் புள்ளியைப் பெற்ற அல்லது அவ் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் ( தரம் 7 முதல் தரம் 11 வரை மாத்திரம் செல்லுபடியாகும்)**<br>4.5.1 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய வருடம்: ............................<br>4.5.2 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை உரித்தாகும் மாவட்டம் :...................<br>4.5.3 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள்: .............<br>4.5.4 வதிவிடத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் :...................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்) | |



Scanned with CamScanner

| | |
|---|---|
| 4.6 கல்விசார் பணிக்குழுவினர் வகுதி<br><br>i. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலையொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்<br><br>ii. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பாடசாலைக் கல்வியில் நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய அரசாங்க நிறுவனமொன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்களது பிள்ளைகள்.<br><br>iii. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கல்வித் துறைக்குரிய வேறு அரசாங்க அல்லது சட்டபூர்வமான நிறுவனம் ஒன்றில் நிரந்தரமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்<br><br>iv. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அரச பல்கலைக்கழகமொன்றில் நிரந்தரமாக/ தகுதிகாண் சேவையாற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களது பிள்ளைகள்<br><br>v. தற்போதைய சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த, விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் அல்லது விண்ணப்பிக்கும் பாடசாலை உரித்தான ஊட்டல் பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி வகுதிகளுக்குரித்தாகாத வேறு அரசாங்க நிறுவனமொன்றின் பிள்ளைகள்<br><br>4.6.1 தொழில்/ பதவி : ..........................................................................<br>4.6.2 தற்போதைய சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி: ............<br>..............................................................................................<br>4.6.3 தற்போதைய சேவை நிலையத்தில் சேவை நிலையம்: .......................<br>4.6.4 அரச சேவையில் நிரந்தர சேவைக் காலம்: ..........................................<br>4.6.5 வதிவிடத்திலிருந்து பாடசாலைக்கான தூரம்:..............................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்)<br>4.6.6 தற்போதைய சேவை நிலையத்திலிருந்து பாடசாலைக்கான தூரம்:...............................<br>(மிகக் குறுகிய பொதுப் போக்குவரத்துப் பாதைக்கமைய கிலோ மீட்டரில்) | |



Scanned with CamScanner

**மேலே ஒவ்வொரு வகுதிக்குரிய பகுதிகளுக்கும் மேலதிகமாக கீழ்வரும் 4.7 மற்றும் 4.8 இற்குரிய விடயங்கள் தரம் 7 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும்.**

| | |
|---|---|
| **4.7 மாணவரின் கற்றல் முன்னேற்றங்கள்**<br>மாணவன்/ மாணவியின் தற்போதைய கல்வி முன்னேற்றம்<br>இறுதித் தவணைப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகள்:- ........................<br>இறுதித் தவணைப் பரீட்சையில் மொத்தப் புள்ளிகளின் சராசரி- .............................. | |

**4.8 அண்மித்த 05 வருடங்களுக்குள் விளையாட்டு/ அழகியல்/ புத்தாக்கம்/ இணைப் பாடவிதானம்/ வெளிப் பாடவிதான செயற்பாடுகள்**

- **விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்**

| விளையாட்டுப் போட்டி | தனி/ குழு | நடாத்தப்பட்ட வருடம் | உரிய நிறுவனம் | பெற்றுள்ள வெற்றிகள் | | அலுவலக உபயோகத்திற்காக |
|---|---|---|---|---|---|---|
| | | | | பாடசாலை/ கோட்டம்/ வலயம்/ மாகாணம் தேசிய/ சர்வதேச | 1/2/3/ ( சர்வதேச பங்குபற்றுகை ) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

- **அழகியலில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்**

| அழகியல் போட்டிகள் | தனி/ குழு | நடாத்தப்பட்ட வருடம் | உரிய நிறுவனம் | பெற்றுள்ள வெற்றிகள் | | அலுவலக உபயோகத்திற்காக |
|---|---|---|---|---|---|---|
| | | | | பாடசாலை/ கோட்டம்/ வலயம்/ மாகாணம் தேசிய/ சர்வதேச | 1/2/3/ (சர்வதேச பங்குபற்றுகை) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |



Scanned with CamScanner

▪ **புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்**

| புத்தாக்கம் | நடாத்தப்பட்ட வருடம் | உரிய நிறுவனம் | பெற்றுள்ள வெற்றிகள் | | அலுவலக உபயோகத்திற்காக |
|---|---|---|---|---|---|
| | | | பாடசாலை/ கோட்டம்/ வலயம்/ மாகாணம் தேசிய/ சர்வதேச | 1/2/3/ ( சர்வதேச பங்குபற்றுகை ) | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

▪ **இணைப் பாடவிதானம் மற்றும் வெளிப் பாடவிதான செயற்பாடுகள்**

| செயற்பாடுகள் | வருடம் | பெற்றுள்ள வெற்றிகள் (பாடசாலை/ கோட்டம்/ வலயம்/ மாகாணம்/ தேசிய/ சர்வதேச) | அலுவலக உபயோகத்திற்காக |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

▪ **தலைமைத்துவத் திறன்கள்**

| உரிய சங்கம்/ கழகம்/ மாணவத் தலைவர்/ விளையாட்டுத் தலைவர் | பதவி | வருடம் | அலுவலக உபயோகத்திற்காக |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

**<u>உறுதிப்படுத்தல்.</u>**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வதிவிடம் மற்றும் ஏனைய தகவல்கள் தொடர்பில் உண்மையான மற்றும் சரியான ஆதாரங்களை முன்னைக்க இணங்குகின்றேன் என்பதையும் உறுதியளிக்கின்றேன். என்னால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு தகவல் பொய்யானது/ போலியானது என்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிந்துள்ளேன். எனது பிள்ளையை பாடசாலைக்கு அனுமதித்த பின்னர் தகவல்கள் பொய்யானவை/ போலியானவை என வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அவரை பாடசாலையிலிருந்து விலக்கி மாகாண/ வலயக் கல்விப் பணிப்பாளரால் குறிப்பிடப்படும் அப் பிரதேசத்தில் அமைந்துள்ள வேறு பாடசாலை ஒன்றில் அனுமதிப்பதற்கு இணங்குகின்றேன்.

............................ ...............................................................

திகதி தாய்/ தந்தை/ சட்டபூர்வமான பாதுகாவலரின் கையொப்பம்



Scanned with CamScanner

உப ஆவண இலக்கம் 02

**பாடசாலை மூலம் தெரிவு செய்யப்படும் மாணவர்களது பெயர் பட்டியலை அனுமதிக்காக அனுப்பும் போது அதிபரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. பாடசாலையின் வெற்றிடங்கள் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் (தரங்களின் எண்ணிக்கைக்கமைய வெற்றிடங்கள், அறிவித்தலை காட்சிப்படுத்திய திகதி மற்றும் இடம், விண்ணப்பப் படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் இறுதித் திகதி, மாதிரி விண்ணப்பப் படிவம்)

2. வலயக் கல்விப் பணிப்பாளரால் அனுமதியளிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினரின் பெயர் பட்டியல் (அங்கத்தவரின் பெயர், பதவி, அடையாள அட்டை இலக்கம், மாதிரிக் கையொப்பம்)

3. நேர்முகப் பரீட்சை சபையினரால் நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களதும் சுற்றுநிருபத்தின் 3.4.5 ம் பந்திக்கமைய தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் (நேர்முகப் பரீட்சை சபையின் அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்.

4. வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய நேர்முகப் பரீட்சை சபையினரால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது புள்ளிகளை வரிசைப்படுத்தி சுற்றுநிருபத்தின் 3.4.5 ம் பந்திக்கமைய தயாரித்து அதிபரது பரிந்துரையுடன் கூடிய பெயர் பட்டியல்

5. பாடசாலைக்கு கிடைக்கப் பெறும் அனைத்து விண்ணப்பப் படிவங்களையும் அவை சார்ந்த ஆவணங்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பது அதிபரது பொறுப்பாகும்.



Scanned with CamScanner